C.C.No. 81/2016

PW2 கமால் மைதீன் த/பெ. நாகூபிச்சை 29.09.2025

( சாட்சி சத்தியப்பிரமாணம் செய்யப்பட்டு சாட்சி விசாரணை பதிவு செய்யப்பட்டது ).

**எதிரி ஆஜர்**

**எதிரிதரப்பில் குறுக்குவிசாரணை**

எந்த தேதியில், எங்கு வைத்து, எத்தனை மணிக்கு போலீசார் என்னை விசாரித்தார்கள் என்றால் போலீசார் என்னை விசாரிக்கவில்லை. ( பின்னர் சாட்சி விசாரித்தாக கூறினார் ). சம்பவம் நடந்த அன்றே புகார் கொடுத்தோமா என்றால் கொடுத்தோம். எனக்கு எவ்வாறு தகவல் தெரியவந்தது என்றால் ஜமாலியா முக்ரீம் தொலைபேசி மூலம் தகவல் சொல்லி எனக்கு தெரியும். இந்த விவத்தை போலீசார் விசாரணையில் சொல்லியுள்ளேனா என்றால் சொல்லியுள்ளேன். அவ்வாறு எந்த சம்பமும் நடைபெறவில்லை, வழக்கிற்காக பொய்யாக சொல்கிறேன் என்றால் சரியல்ல, ஜாமாலியா முகமது முக்ரீம், முகமது யாசின், கலிபுல்லா, அனைவரும் எனது உறவினர்கள் என்றால் ஜாமாலியா முகமது முகரீம் எனது உறவினர். எந்தனை மணிக்கு எனக்கு தொலைபேசியில் தகவல் சொல்லப்பட்டது என்றால் பகல் 12.30 மணி இருக்கும். அவர் தகவல் சொன்னபோது நான் எங்கு, யாருடன் இருந்தேன் என்றால் பள்ளிவாசல் அருகே கலிபுல்லாவுடன் இருந்தேன். எதிரி கடப்பாறை, மண் வெட்டியை காட்டி உள்ளே வந்தால் வெட்டிவிடுவேன் என்று சொல்லி மிரட்டினார் என்ற விவரத்தை போலீசார் விசாரணையில் சொல்லியுள்ளேனா என்றால் சொல்லியுள்ளேன். அவ்வாறு நான் சொல்லவில்லை வழக்கிற்காக பொய்யாக சொல்கிறேன் என்றால் சரியல்ல. எத்தனை மணிக்கு போலீசார் என்னை விசாரித்தார்கள் என்றால் சம்பவம் நடந்த அன்று மாலை 04.00 அல்லது 05.00 மணிக்கு விசாரித்தார்கள். 22.12.2015 ம் தேதி எதிரியின் வீட்டை சுற்றி ஜாமாலியா முகமது முகரீம் கல் ஊன்றிய விவரம் தெரியுமா என்றால் தெரியாது. எதிரி பட்டியல் இன சமூகத்தை சேர்ந்தவர் என்ற விவரம் தெரியுமா என்றால் தெரியும்.

2) எதிரி காவல் கண்காணிப்பாளரிம் கொடுத்த புகார் சம்மந்தமாக மேலூர் போலீசார் எங்களை விசாரணை செய்தார்களா என்றால் என்னையும், ஜாமாலியா முகமது முகரீம், கலிபுல்லா, இளங்கோவன் அண்ணாமலை ஆகியோர்களை விசாரித்தார்கள். அப்போது

எதிரி விசாரணைக்கு வரவில்லை. எதிரியுடன் பேச்சு வார்த்தை நடத்தி மேற்கூறிய புகாரை திரும்ப பெற சொன்னார்கள் என்றால் இல்லை. அந்த புகாரை எதிரி திரும்ப பெற்ற பின்னர் 01.01.2016 ம் தேதி எங்கள் அரசியல் செல்வாக்கை பயன்படுத்தி எதிரி மீது பொய்யான புகாரை கொடுத்துள்ளோம் என்றால் சரியல்ல. நான் சொன்ன தேதியில், சொன்ன நேரத்தில், சொன்ன இடத்தில் எந்த சம்பமும் நடைபெறவில்லை, எதிரி மீது பொய்யாக வழக்கு கொடுத்துள்ளோம் என்றால் சரியல்ல.

PW3 முகமது இப்ராகிம் த/பெ.அப்துல் ஹலிம் சித்திக் 29.09.2025

( சாட்சி சத்தியப்பிரமாணம் செய்யப்பட்டு சாட்சி விசாரணை பதிவு செய்யப்பட்டது ).

**எதிரி ஆஜர்**

**எதிரிதரப்பில் குறுக்குவிசாரணை**

ஜமால் முகமது முக்ரிம் எப்போது எனக்கு போன் செய்தார் என்றால் ஜமால் முகமது முக்ரிம் எனக்கு போன் செய்யவில்லை, கலிபுல்லா சொல்லிதான் எனக்கு தெரியும். ஜமால் முகமது முக்ரிம், கலிபுல்லா ஆகியோர் எனது உறவினர்கள் என்றால் இல்லை. நான் சம்பவம் நடந்த இடத்திற்கு எத்தனை மணிக்கு சென்றேன் என்றால் 11.30 மணி இருக்கும். நான் எத்தனை மணிக்கு காவல் நிலையத்திற்கு புகார் கொடுக்க வந்தோம் என்றால் 12.00 மணியளவில். நான் சம்பவம் நடந்த இடத்திலிருந்து எவ்வாறு காவல் நிலையத்திற்கு வந்தோம் என்றால் ஆளொக்கொரு இருசக்கர வாகனத்தில் வந்தோம். நான் எனது இரு சக்கர வாகனத்தில் வந்தேன் என்றால் சரிதான். கலிபுல்லா எந்த வாகனத்தில் வந்தார் என்றால் அவருடைய இரு சக்கர வாகனத்தில் வந்தார். நான் சொன்னதுபோல் எந்த சம்பவமும் நடைபெறவில்லை, வழக்கிற்காக பொய்யாக சொல்கிறேன் என்றால் சரியல்ல. எதிரியிடம் சென்று ஜமால் முகமது முக்ரிம் இடத்தில் ஏன் செட் போடுகிறீர்கள் என்று கேட்ட விவரத்தை போலீசார் விசாரணையில் சொல்லியுள்ளேனா என்றால் சரிதான். கடப்பாறை ஆகியவற்றை வைத்து எதிரி தாக்க வந்த விவரத்தை போலீசார் விசாரணையில் சொல்லியுள்ளேனா என்றால் சொல்லியுள்ளேன். எங்கு வைத்து போலீசார் என்னை விசாரித்தார்கள் என்றால் காவல் நிலையத்தில் வைத்து விசாரித்தார்கள். ஏதேனும் ஆவணத்தில் நான் கையொப்பம் செய்தேனா என்றால் எத்தனை ஆவணம் என்று ஞாபகம் இல்லை, ஆனால் கையொப்பம் செய்தேன். அவ்வாறு நான் கையொப்பம் செய்த ஆவணத்தை இந்நீதிமன்றத்தில் என்னிடம் காட்டினார்களா என்றால் இல்லை. சொன்ன நேரத்தில், சொன்ன தேதியில், சொன்ன இடத்தில் எந்த சம்பமும் நடைபெறவில்லை, என்னை விசாரிக்கவும் இல்லை, வழக்கிற்காக பொய்யாக சொல்கிறேன் என்றால் சரியல்ல. எதிரிக்கும், இந்த வழக்கிற்கும் எந்த சம்மந்தமும் இல்லை என்றால் சரியல்ல.

PW5 இளங்கோ த/பெ.ராசு 29.09.2025

( சாட்சி சத்தியப்பிரமாணம் செய்யப்பட்டு சாட்சி விசாரணை பதிவு செய்யப்பட்டது ).

**எதிரி ஆஜர்**

**எதிரிதரப்பில் குறுக்குவிசாரணை**

நான் என்ன தொழில் செய்து வருகிறேன் என்றால் ரியல் எஸ்டேட் தொழில் செய்து வருகிறேன் நான் கட்சியில் இருந்து வருகிறேன் என்றால் சரிதான், திமுக கட்சியில் உள்ளேன். முகமது யாசின் திமுக கட்சியில் நகர செலாளராக உள்ளார் என்றால் சரிதான். எத்தனை மணிக்கு போலீசார் என்னை விசாரித்தார்கள் என்றால் சம்பவம் நடந்த இரண்டு நாட்கள் கழித்து மதியம் சுமார் 01.00 மணிக்கு விசாரித்தார்கள். எங்கு வைத்து விசாரணை செய்தார்கள் என்றால் சம்பவ இடத்தில் வைத்து விசாரித்தார்கள், எதிரியை தெரியுமா என்றால் தெரியும். எதிரியின் வீடு தெரியுமா என்றால் தெரியாது, சம்பவம் பற்றி எனக்கு தெரியுமா என்றால் தெரியாது. என்னிடம் தற்போது காட்டப்படும் பார்வை மகஜரில் உள்ள 2ம் சாட்சி கையொப்பம் என்னுடையதுதான், ( **அந்த சாட்சி கையொப்பம் அசாஆ 6 ஆக குறீயிடு செய்யப்படுகிறது**). அதில் என்ன விவரம் எழுதப்பட்டது தெரியாது என்றால் சரிதான். சொன்ன நேரத்தில், சொன்ன தேதியில், சொன்ன இடத்தில் எந்த சம்பமும் நடைபெறவில்லை, என்னை விசாரிக்கவும் இல்லை, வழக்கிற்காக பொய்யாக சொல்கிறேன் என்றால் சரியல்ல. எதிரிக்கும், இந்த வழக்கிற்கும் எந்த சம்மந்தமும் இல்லை என்றால் சரியல்ல. நான் இடம் பார்க்க சம்பவ இடம் சென்றபோது என்னுடன் யார் உடன் இருந்தார் என்றால் அழகுபாண்டி இருந்தார். நான் கையொப்பம் செய்தபோது அதில் அழகுபாண்டி கையொப்பம் செய்திருந்தார் என்றால் சரிதான்.